DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No.13/2019**
**P.W.1**

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.கீதா |
| Husband's Name | : | திரு.செல்வராஜ் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 45 |

(Accused 2 is present. Accused 1 and 4 are absent. Petition filed u/s.317 Cr.PC is allowed. )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 9th day of April 2026.

**முதல் விசாரணை**

நான் திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், அம்மாப்பட்டி அஞ்சல், முத்தையன்பாளையம், புதுகருப்பு கோவில் அருகில் கதவு எண்.415 என்ற முகவரியில் குடியிருக்கிறேன். என் கணவர் முத்தையன் பாளையத்தில் ஒரு ஏக்கர் நிலத்தில் மெத்தை வீடு கட்டி காட்டுப் பகுதியில் குடியிருந்து வருகிறோம். நாங்கள் இந்து பறையர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஆவோம். எனக்கு ஆறு பெண் பிள்ளைகளும், ஒரு ஆண் பிள்ளையும் உள்ளனர். என் கணவர் அடிக்கடி வேலை காரணமாக வெளியூர் சென்றுவிடுவார். எனது கணவர் மணிவேல் என்பவரிடம் கடந்த 08.11.2013 அன்று குழந்தைகள் படிப்பு செலவிற்காகவும், குடும்பச் செலவிற்காகவும் ரூபாய் 4 லட்சம் கடனாக வாங்கி இருந்தார். அதற்கு மாதம் தவறாமல் ரூபாய் 1,49,000/- 2015ம் ஆண்டு வரை வட்டி செலுத்தி வந்தார். அந்த வருடம் ஏற்பட்ட கடும் வறட்சி காரணமாக வட்டி மற்றும் அசலை செலுத்த முடியாத நிலையில் இருந்து வந்தோம். அதன் பிறகு மணிவேல் 15

ஆட்களை கூட்டிக்கொண்டு எங்கள் வீட்டிற்கு வந்து எனது கணவரை மிரட்டி கொடுத்தால் வீட்டையும் காட்டையும் கொடு என்று ஆட்களை வைத்து மிரட்டி பத்திர அலுவலகத்திற்கு கூட்டிக்கொண்டு சென்று பத்திரத்தில் கையெழுத்து போடாவிட்டால் உன்னையும் உன் பிள்ளைகளையும் கொன்று விடுவோம் என்று சொல்லி மிரட்டினார்கள். என் கணவர் பிள்ளைகளுக்கும் எனக்கும் பயந்து கையெழுத்து போட்டு கொடுத்து விட்டார். என் கணவர் வீட்டுக்கு திரும்பி வந்த போது நாங்கள் கேட்டோம். அவருக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை. ரூபாய் 30 லட்சம் மதிப்பு உள்ள சொத்தை வெறும் 4 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய்க்கு கிரையம் எழுதிக் கொண்டார்கள். அதன் பிறகு ரூபாய் பதினோரு லட்சத்து 29 ஆயிரம் கொடுத்தால் சொத்தை என் கணவருக்கு திருப்பிக் கொடுத்து விடுகிறேன் என்று சொல்லி ஒரு முச்சரிக்கை பத்திரம் எழுதிக் கொடுத்தார். அதன் பிறகு இரண்டு மாத காலம் கழித்து என் கணவர் பத்திரம் எழுதிக் கொடுத்த விவரத்தை கூறினார். மாவட்ட ஆட்சித் தலைவர், தமிழக முதல்வர், காவல் கண்காணிப்பாளர், நில மோசடி பிரிவு ஆகிய உயர் அதிகாரிகளுக்கு புகார் அனுப்பினோம். கோட்டாட்சியர் அலுவலகத்தில் விசாரணை நடைபெற்றது. அங்கு நடைபெற்ற விசாரணையில் நடந்த உண்மைகளை தெரிவித்தேன். இரண்டாவது எதிரி சண்முகத்திற்கு முதல் எதிரி மணிவேல் சொத்தை கிரையம் செய்து கொடுத்துவிட்டார். அதை தெரிந்து என் கணவர் மோசடிப் பத்திரம் செல்லாது என்று அறிவிக்க கேட்டு துறையூர் சார்பு நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்தார். அந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு அந்த சொத்திலேயே நாங்கள் விவசாயம் செய்து அனுபவித்து குடியிருந்து வருகிறோம். அந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது கடந்த 18.08.2017 அன்று மாலை 4.30 மணியளவில் எதிரிகள் மணிவேல், சண்முகம், அருணாச்சலம், கருப்பண்ணன் ஆகியோர் பயிர் செய்து வைத்திருந்த சோள பயிர்களை டிராக்டர் விட்டு நாசம் செய்தார்கள். எதிரி அருணாச்சலம் என் தலை முடியை பிடித்து இழுத்து நெஞ்சில் குத்தி பற தேவடியா புண்ட உனக்கு என்னடி ஓசி வீட்டில் குடியிருக்கிற என்றான். எதிரி சண்முகம் இவளை அடித்து போடு என்று தூண்டி விட்டார். டிராக்டர் ஓட்டி வந்த கருப்பண்ணன் உன்னை இந்த காட்டிலேயே சாவடித்து விடுவேன் என்றான். என் கணவர் தடுக்க வந்த போது அவரை கம்பாலும்,

தடியாலும் அடித்தார்கள். காட்டில் களை எடுக்க வந்த பழனியாண்டி மனைவி ஆராயி என்பவரும், கனகராஜ் மனைவி செல்வராணி என்பவரும் அதை பார்த்து பயந்து ஓடிவிட்டார்கள். அங்கு கோவிலுக்கு சாமி கும்பிட வந்திருந்த ஜெயங்கொண்டம் ஊரைச் சேர்ந்த கருப்பன் மகன் பூபதி என்பவர் என்னையும், என் கணவரையும் துறையூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார். நான் உள்நோயாளியாகவும் என் கணவர் புறநோயாளியாகவும் சிகிச்சை பெற்று விட்டு இருந்தபோது துறையூர் காவல் நிலையத்தில் இருந்து தகவல் பெற்று வந்த அதிகாரியிடம் நடந்த விபரங்களை நான் தெரிவித்தேன். என் கணவரை காவல் நிலையம் வந்து விவரம் தெரிவிக்க சொல்லி அழைத்துச் சென்ற பிறகு என் கணவர் 15 நாட்கள் வீட்டிற்கு திரும்பி வரவில்லை. நான் என் சகோதரி வீடு அமைந்துள்ள கீரம்பூர் கிராமத்திற்கு சென்று விட்டேன். நான் மருத்துவமனையில் மூன்று நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். என் கணவர் பதினைந்து நாட்கள் கழித்து ஊருக்கு வந்தபோது போலீசார் ஊர்காரர்கள் குடும்பத்தையே காலி செய்து விடுவார்கள் என்றும், எனவே எங்காவது ஓடிப் போய் விடு என்றும், பொய் வழக்கு போட்டு ஜெயிலுக்கு அனுப்பி விடுவோம் என்று மிரட்டிய காரணத்தினால் மீண்டும் தமிழக முதல்வர் திருச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முசிறி உட்கோட்ட துணை கண்காணிப்பாளர் துறையூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் ஆகியோர்களுக்கு புகார்கள் அனுப்பினோம். அந்த புகாரின் மீது எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படாததால் மாண்புமிகு உயர் நீதிமன்ற மதுரை கிளையில் உத்தரவு பெற்று அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. அதன் பிறகு காவல் நிலையத்தில் எங்களை விசாரணை செய்தார்கள். மீண்டும் நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் மாண்புமிகு உயர் நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தாக்கல் செய்தோம். அந்த வழக்கில் காவல்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்ததால் முடிக்கப்பட்டது. அதன் பிறகு துறையூர் காவல் நிலையத்தில் வந்து விசாரித்தார்கள். நாங்கள் கொடுத்த புகாரின் அடிப்படையிலான வழக்கு சங்கதிகள் அடிப்படையில் தவறானது என்று இறுதி அறிக்கையை தாக்கல் செய்யப்பட்டு இருக்கும் காரணத்தினால் இந்த தனிப்புகாரை தாக்கல் செய்தோம். நான் தாக்கல் செய்த தனிப்புகார்

மனு **அ.த.சா.ஆ.1** ஆகும். மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரை கிளை Crl.O.P.No.14688/2017ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு **அ.த.சா.ஆ.2** ஆகும். மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரை கிளை Crl.O.P.No.3061/2018ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு **அ.த.சா.ஆ.3** ஆகும். இரண்டாம் எதிரி தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.191/2017ன் பிராதின் புகைப்பட நகல் **அ.த.சா.ஆ.4** ஆகும். இரண்டாவது எதிரி தாக்கல் செய்த இடைக்கால மனு எண்.441/2017 மனுவின் புகைப்பட நகல் **அ.த.சா.ஆ.5** ஆகும். 11.10.2017ல் குற்ற முறையீட்டாளர் அனுப்பிய புகாரின் நகல் **அ.த.சா.ஆ.6** ஆகும். ஒப்புதல் அட்டைகள் மற்றும் தபால் ரசீதுகள் **அ.த.சா.ஆ.7** ஆகும். குற்றமுறையீட்டாளரின் கணவர் துறையூர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.41/2017 பிராதின் நகல் **அ.த.சா.ஆ.8** ஆகும்.

**<u>குறுக்கு விசாரணை(எதிரிகள் தரப்பில்)</u>**

நாங்கள் மணிவேலுவிடம் ரூபாய் 4 லட்சம் கடனாக பெற்றது தொடர்பான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. நாங்கள் அவரிடம் ஒவ்வொரு மாதமும் வட்டி செலுத்தியதை காண்பிக்க கூடிய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. மணிவேலுக்கு நாங்கள் ரூபாய் 1,49,000/- திருப்பி செலுத்தியதை காண்பிக்கக்கூடிய ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. அது என் கணவருக்கு தான் தெரியும். என் கணவரை 15 ஆட்கள் வந்து அழைத்துச் சென்றதாக கூறி இருப்பது தொடர்பாக அந்த நபர்களின் பெயர்களை நான் சொல்லவில்லை. என் கணவரை எந்த தேதியில் எத்தனை மணிக்கு அவ்வாறு அழைத்துச் சென்றார்கள் என்ற விபரத்தை குற்றமுறையீட்டில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் அந்த தேதியில் எனக்கு மன வேதனை ஏற்பட்ட காரணத்தினால் தேதி நினைவில்லை. வீட்டிற்கு வெளியே நின்றதாகச் சொல்லக்கூடிய ஐந்து நபர்களின் பெயர்களும் எனக்கு தெரியாது. ஆனால் அடையாளம் காண்பிக்க முடியும். என் கணவரை 15 நபர்கள் கடத்திச் சென்றதாக கூறுவது தொடர்பாக அன்றைய தேதியில் நான் எந்த ஒரு புகார் கொடுக்கவில்லை என்றால் அன்றைய தினம் எனக்கு ஒன்றும் தெரியவில்லை. என் கணவர் திரும்பி வந்த பிறகு உடல் நலம் சரியான பிறகு புகார் கொடுத்தோம். சார் பதிவாளர் முன்பாக என் கணவர் என்னை மிரட்டி கையொப்பம் போடச் சொல்கிறார்கள் என்று தெரிவித்தாரா என்றால் அவர்கள் ஆட்கள் தான் அங்கு

இருந்திருக்கிறார்கள். என்னை மிரட்டி ஆவணம் எழுதி வாங்கி விட்டார்கள் என்று என் கணவர் அந்த ஆவணம் பதிவு செய்யப்பட்ட மறுநாளோ அல்லது பின்னிட்டோ புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் 20 நாட்கள் கழித்து தான் என் கணவர் என்னிடம் தெரிவித்தார். அதன் பிறகு சுயநினைவு வந்த பிறகு நடவடிக்கை எடுத்தோம். என் கணவரை மோசடியாக மிரட்டி எழுதி வாங்கியதாக சொல்லக்கூடிய ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. என் கணவர் எழுதிக் கொடுத்ததாக சொல்ல கூடிய சொத்தின் மதிப்பு ரூபாய் பத்து லட்சத்திற்கும் அதிகமாக இருக்கும் என்பதை காண்பிக்க கூடிய சொத்தின் மதிப்பை காட்டக்கூடிய ஆவணம் எதையும் இந்த புகார் உடன் தாக்கல் செய்யவில்லை. மணிவேல் ரூ.11,29,000/- திருப்பிச் செலுத்தி விட்டால் என் கணவருக்கே சொத்தை திருப்பி எழுதிக் கொடுத்து விடுகிறேன் என்று ஒரு பத்திரம் முதல் எதிரி எழுதிக் கொடுத்ததாக கூறியிருக்கும் ஆவணத்தை இந்த வழக்கில் என் தரப்பில் தாக்கல் செய்யவில்லை. அந்தப் பத்திரத்தை யார் எழுதினார்கள், எங்கு வைத்து எழுதப்பட்டது என்ற விவரங்கள் எதையும் புகாரில் சொல்லவில்லை. 30.06.2015 அன்று என் கணவர் எழுதிக் கொடுத்த ஆவணம் தொடர்பாக கடந்த 11.10.2015 அன்று தான் முதன் முதலாக புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்தப் புகார் கொடுப்பதற்கு முன்பாக வழக்கறிஞரிடம் ஆலோசனை பெற்று புகார் கொடுக்கப்பட்டது என்றால் நானும், என் கணவரும் தான் சேர்ந்து ஆலோசனை செய்து புகார் கொடுத்தோம். 18.08.2017ம் தேதி நடைபெற்றதாக சொல்லும் சம்பவத்திற்கு நான் உடனடியாக எந்த ஒரு புகார் கொடுக்கவில்லை என்றால் நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் வந்து விசாரித்தார்கள். அவர்களிடம் நடந்த விவரத்தை நான் தெரிவித்தேன். நான் ஏற்கனவே அன்றைய தேதியில் போலிசாரிடம் கொடுத்ததாக சொல்லக் கூடிய புகார் மனுவின் சான்றிட்ட நகலை இந்த குற்ற முறையீட்டோடு தாக்கல் செய்யவில்லை என்றால் நான் நடந்த உண்மையை போலீசாரிடம் சொன்னேன். 18.08.2017ம் தேதி எங்கள் வயலில் பயிர்கள் இருந்தது என்பதை காண்பிப்பதற்கும் அவை எதிரிகளால் சேதப்படுத்தப்பட்டது என்பதை காண்பிப்பதற்கும் புகைப்படங்கள் மற்றும் வீடியோ ஆதாரம் உள்ளதா என்றால் புகைப்படம் எடுக்கக்கூடிய

செல்போன் இல்லை. பட்டன் செல்போன் தான் இருந்தது. அன்றைய தினம் எதிரிகள் வந்ததாகவும், பயிர்களை சேதப்படுத்தியதாகவும், சாதி குறித்து இழிவாக பேசியதாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானும் என் கணவரும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதை காண்பிக்க கூடிய மருத்துவ ஆவணங்கள் சான்றிட்ட நகல் பெற்று தாக்கல் செய்யவில்லை என்றால் புகைப்பட நகல் தாக்கல் செய்திருக்கிறேன். மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த என் கணவர் 15 நாட்கள் திரும்பி வரவில்லை என்று நான் உடனடியாக புகார் மனு எதுவும் கொடுக்கவில்லை. காவல் நிலையத்தில் இருந்த போலீசார் குடும்பத்தை காலி செய்துவிட்டு எங்காவது ஓடிப் போய் விடு என்று கூறியதாக குறிப்பிடும் காவலர்கள் மீது மேலதிகாரிகளிடம் புகார் கொடுக்கவில்லை. அந்தப் புகாரை இந்த குற்றமுறையீட்டுடன் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்து இருக்கிறேன். மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட வழக்கானது உண்மைக்கு புறம்பானது என்று முடிக்கப்பட்டது என்றால் சரிதான். நான்காவது எதிரி ஓட்டி வந்ததாக சொல்லக் கூடிய டிராக்டரின் பதிவு எண் சொல்லப்படவில்லை என்றால் அவர்கள் உடனடியாக அந்த வண்டியை எடுத்துக்கொண்டு ஓடி விட்டார்கள். பூபதி என்பவர் என்னையும் என் கணவரையும் ஒரு பைக்கில் அழைத்துச் சென்றார். அந்த வண்டியின் எண் விவரம் எனக்கு அடிபட்டு இருந்ததால் தெரியவில்லை. மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது விசாரித்து சென்றதாக சொல்லக்கூடிய காவல் அதிகாரியின் பெயர் தெரியாது. என் கணவரை மருத்துவமனையில் இருந்து அழைத்துச் சென்றதாக சொல்லக்கூடிய காவல் அதிகாரியின் பெயர் எனக்குத் தெரியாது. அது என் கணவருக்கு தான் தெரியும். என் கணவர் கீரம்பூருக்கு எந்த தேதியில் திரும்பி வந்தார் என்றால் தெரியாது. என் கணவர் ஒரு உரிமையியல் வழக்கையும் எதிரி சண்முகம் ஒரு உரிமையியல் வழக்கையும் தாக்கல் செய்து அது இந்த நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். நான் கொடுத்த புகார் மனுவானது விசாரணையின் அடிப்படையில் உண்மைக்கு புறம்பானது என்று முடிக்கப்பட்டது என்றும், உரிமையியல் வழக்குகளை சாதகமாக முடிப்பதற்காக இந்த குற்றமுறையை தாக்கல் செய்து இருக்கிறேன்

என்றால் சரியல்ல. கிரையம் செய்து கொடுத்த சொத்தை எப்படியாவது பெற்று விட வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த குற்றமுறையீட்டை தாக்கல் செய்து இருக்கிறேன் என்றால் சரியல்ல. குற்றமுறையீட்டில் குறிப்பிட்டவாறு எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் பொய்யான புகார் கொடுத்து அந்த பொய் புகாரின் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXX,

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

Adobe